திரு. ஜி. சுவாமிநாதன் : பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் 1-4-1970 முதல் அவர்களுடைய பணிக்காலம் வரன்முறைப்படுத்தப் படாமல் இருக்கின்றது. அவர்கள் ஊதிய உயர்வு பெறுமல் இருக்கின்றார்கள். இடைநிலை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஊதிய உயர்வு பெற்று வருகின்றார்கள். ஆனல் இப்போதுள்ள ஆணை, அவர்களுக்குக் கொடுத்த ஊதிய உயர்வினைத் திரும்பப் பெறும் வகையில் அமைந்திருக்கிறது. எனவே இரண்டையும் பரிசீலித்து, பெற்ற பணத்தைத் திரும்பத் தரவேண்டாம் என்ற ஒரு உத்தரவினை உடனடியாக அரசு பிறப்பிக்க வேண்டும். இது ஒன்று. மற்றொன்று, ஏற்கெனவே கொடுக்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு இன்னும் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதற்கான உத்தரவினையும் அரசு பிறப்பிக்க வேண்டும். இந்த உத்தரவினைப் பிறப்பிக்கவில்லையென்றால், இதனல் ஆசிரியர்களுக்குப் பெருத்த கஷ்டம் ஏற்பட இருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டி உடனடியாக உத்தரவுகளை அரசு பிறப்பிக்குமா என்பதை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சட்டசபையிலேயே உத்தரவிட வேண்டும் என்று விரும்புகின்றார்போல இருக்கின்றது. முன்பே நான் சொல்லியிருக்கிறேன், இது பற்றிப் பரிசீலிக்கலாம், யோசனை செய்யலாம் என்று.

Integrated Urban Development Programme.

@ * 123 *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to bring Madurai Metropolitan areas under the Integrated Urban Development Programme;

(*b*) if so, the details thereof; and

(*c*) the stage at which the matter now stands?

ஒருங்கிணைக்கப்பட்ட நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்

திரு. கே. எஸ். கணபதி (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை பெருநகர்ப் பகுதிகளை, ஒருங்கிணைக்கப்பட்ட நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கொண்டு வருவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

@ 24—2—1978 ஆம் தேதி வினப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப் பட்டது.

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) இவ்விஷயம் தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(இ) ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்படி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் போல், மதுரை, கோயமுத்தூர் மாநகரங்களுக்கு பெருநகர் வளர்ச்சிக் குழுமங்கள் அமைக்க, நகர்-ஊரமைப்பு இயக்குநர் திட்டம் ஒன்றை அரசுக்கு அனுப்பியுள்ளார். குடிநீர் வசதி, வடிகால்கள், சாலைகள், குடியிருப்புகள் கட்டுதல், பள்ளி, பொது சுகாதாரம் மற்றும் மருத்துவமனைகள் வருவாய் தரக்கூடிய திட்டங்கள் போன்ற முக்கிய பணிகளை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. ஐந்தாண்டு காலத்தில் இத் திட்டங்களை மத்திய அரசு மற்றும் உலகவங்கி உதவியுடன் நிறைவேற்றுவதற்கு மொத்தம் ரூ. 94.79 கோடி செலவாகும். தண்ணீர் வசதி, வடிகால்கள், சாலைகள் போன்ற சில பணிகளை நடப்பு ஆண்டிலும் அதற்கு அடுத்த ஆண்டிலும், அத் திட்டத்தின் முக்கியத் துவத்திற்கு ஏற்ப, வரிசையாகச் செயல்படுத்த மாநில அரசு தேர்ந்தெடுத் துள்ளது. இதற்காகும் மொத்தச் செலவு ரூ. 3.99 கோடியாகும். மதுரைக்கு ரூ. 1.62 கோடி செலவும் கோயமுத்தூருக்கு ரூ. 2.37 கோடி செலவும் ஆகும்.

(உ) இத்திட்டங்களின் ஒப்புதலுக்காக மத்திய அரசுக்கு எழுதப் பட்டுள்ளது.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, ஒருங்கிணைக்கப்பட்ட நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்படி, சென்னைப் பெருநகரில் அமைந்துள்ளதைப் போன்று மதுரைப் பெருநகரிலும் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அமைக்க ஆய்வுக் குழுவினால் ஆய்வு செய்யப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இந்த ஒருங்கிணைக்கப்பட்ட நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் நகர் மன்றங்கள் கொண்டுள்ள எந்தெந்தத் திட்டங் களைத் தன்னகத்தே எடுத்துக் கொள்ளுகின்றது, நகர மன்றங்களுக்குள்ள எந்தெந்த அதிகாரங்களை இந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழே அக்குழுமம் எடுத்துக்கொள்ளுகிறது ? இப்படி ஏற்றுக் கொள்ளுவதனால் நகர மன்றங்களுக்கு ஏற்பட்டுள்ள தொல்லைகள், சிரமங்கள் எந்த அளவிற்குக் குறைய இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தனிக்கேள்வி போடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மதுரை நகர மேம்பாட்டுத் திட்டங் களுக்கென மத்திய அரசும் உலக வங்கியும் சேர்ந்து பண ஒதுக்கீட்டினைச் செய்வதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். அந்த மேம்பாட்டுத்

திட்டம்பற்றி ஆய்வினை நடத்திட ஒரு நிபுணர் குழு மத்திய அரசிலிருந்து வந்து சென்றதாகவும் தெரிவித்திருக்கின்றார்கள். அந்த நிபுணர் குழுவின் பரிந்துரைகள் என்னென்னவென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நிபுணர் குழு வந்தது உண்மை. பரிந்துரைகளைக் கொடுத்திருப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் என்னென்ன பரிந்துரை என்பது தெரியாது.

Drinking Water Supply Scheme.

@ * 124 *Q.*—THIRU V. R. PERIANNAN : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) the stage at which the Drinking Water Supply Scheme for (i) Kalappanayakkanpatti, (ii) Senthamangalam and (iii) Namagiripet Town Panchayats in Senthamangalam Union of Salem District, stands at present; and

(*b*) wherefrom it has been planned to bring water to them?

குடிநீர் வழங்கும் திட்டம்

திரு. வி. ஆர். பெரியண்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம் மாவட்டம், சேந்தமங்கலம் ஒன்றியத்திலுள்ள காளப்ப நாயக்கன்பட்டி (ii) சேந்தமங்கலம், (iii) நாமகிரிப்பேட்டை பேரூராட்சி ஆகியவைகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

(இ) அவைகளுக்கு எங்கிருந்து நீர் கொண்டு வரத் திட்டமிடப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) சேலம் மாவட்டம், சேந்தமங்கலம் ஒன்றியத்திலுள்ள காளப்ப நாயக்கன்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை பேரூராட்சி ஆகியவைகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையிலுள்ளது.

(இ) (i) காளப்ப நாயக்கன்பட்டி—

கருவட்டார் ஆற்றின் கரையில் ஒரு கிணறு தோண்டி அக்கிணற்றி லிருந்து நீர் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

@ 24—2—1978-ந் தேதி வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்